# எல்லாம் நிறைவேறிற்று: (அரு. 19:30)

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, ஒவ்வொரு ஆண்டும் புனித வாரத்தில் பாஸ்கா மறைநிகழ்சிகளாகிய இயேசு கிறிஸ்துவின் புனிதமான பாடுகளையும், சிலுவை மரணத்தையும், மகிமையான உயிர்ப்பையும் பொருள் மிகுந்த புனித சடங்குகளால் நாம் கொண்டாடுகின்றோம். புனித வெள்ளி இன்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் புனிதமான பாடுகளையும், சிலுவை மரணத்தையும் நாம் மிகச் சிறப்பான முறையில் நினைவு கூறுகின்றோம்.

நம் உடலைச் சிலிர்க்க வைக்கும் இயேசுவின் புனித பாடுகள்; நம் உள்ளத்தை உருகவைக்கும் இயேசுவின் புனித பாடுகள்; நம் கல்லான இதயத்தைத் கரையச் செய்யும் இயேசுவின் புனித பாடுகள். கடவுளின் திருமகன் இயேசு கல்வாரி மலையில் விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே சிலுவையிலே தொங்கிக் கொண்டிருக்கிறார். அவரது புனிதமான உடல் உடைக்கப்படுகிறது; புனிதமான இரத்தம் சிந்தப்படுகிறது; திரு இருதயம் ஈட்டியால் குத்தித் திறக்கப்படுகிறது.

கல்வாரியின் இந்த காட்சியானது கடவுளின் அளவற்ற அன்புக்கு சாட்சி; கல்வாரியின் இந்த காட்சியானது இயேசுவின் இரக்கம் மிகுந்த அன்புக்கு சாட்சி; கல்வாரியின் இந்த காட்சியானது நம் பாவங்களுக்கு சாட்சி. கல்வாரியின் காட்சியைக் காண புனித வெள்ளி நம்மை அழைக்கிறது; கல்வாரியின் நிகழ்ச்சியிலே பங்கு பெற புனித வெள்ளி நம்மை அழைக்கிறது; கல்வாரியின் சிலுவையிலே இயேசு நமக்காக சிந்திய இரத்தத்தின் பயனை முழுமையாகப் பெற புனித வெள்ளி நம்மை அழைக்கிறது.

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறி சிலுவையிலே தொங்கிக்கொண்டிருக்கிறார். உடலிலும் உள்ளத்திலும் மிகுந்த வேதனைகளை அனுபவிக்கின்றார். அந்நேரத்தில் இயேசு ஏழுமுறை பேசினார் என்று நற்செய்தியில் நாம் வாசிக்கின்றோம். கல்வாரியின் சிலுவையில் இயேசு கூறிய வார்த்தைகள் அவரது மரண சாசனமாக அமைகிறது. இறைமக்களாகிய நம் வாழ்வுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

"எல்லாம் நிறைவேறியது என்று அறிந்த இயேசு, "தாகமாயிருக்கிறது" என்றார்; மறைநூல் நிறைவேறவே இப்படிச் சொன்னார். அங்கே ஒரு பாத்திரம் நிறையக் காடி இருந்தது. அதில் கடற்காளானைத் தோய்த்து, அதை உயர்த்தி அவரது வாயில் வைத்தார்கள். காடியைச் சுவைத்தபின் இயேசு, "எல்லாம் நிறைவேறிற்று" என்றார். பின்பு தலை சாய்த்து ஆவியைக் கையளித்தார் (அரு. 19:28-30). சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசு, எல்லாம் நிறைவேறியது என்று எல்லாம் நிறைவேறியது அறிந்தவராய், "எல்லாம் நிறைவேறிற்று" என்று அறிக்கையிடுகின்றார்.

பாவத்தினால் தம்மைவிட்டு அகன்று சென்ற மனிதனை, தம் திருமகன் இயேசு வழியாக தம்மிடம் மீண்டும் கொண்டுவர இரக்கமே உருவான இறைவன் திருவுளம் கொள்கின்றார். "எல்லா மனிதரும் மீட்புப் பெறவும், உண்மையின் அறிவை அடைந்து கொள்ளவும் வேண்டும் என்பதே" (1 திமோ. 2:4) இறைவனின் விருப்பம். "இதுவே மீட்பின் திட்டமாகும்". "தம் ஒரே மகன் மீது விசுவாசம்கொள்ளும் எவரும் அழியாமல், நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்" (அரு. 3:16) "தந்தை தம் மகனை உலகிற்கு மீட்பராக அனுப்பினார்" (1 அரு. 4:14). உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, அதை மீட்கவே இயேசு இவ்வுலகில் மனிதவுரு எடுக்கின்றார்.

இயேசுவின் மனித பிறப்பின் நோக்கம்பற்றி புனித மத்தேயு மிகத் தெளிவாக பின்வருமாறு கூறுகின்றார். மரியா "ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில், அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்டார்" (மத். 1:21). தாவீதின் ஊரிலே இயேசு மீட்பராகப் பிறந்துள்ள வரலாற்று நிகழ்வு, மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக அறிவிக்கப்படுகிறது (காண். லூக். 2:10-11).

எல்லா மனிதரும் மீட்பு அடைய வேண்டும் என்ற வானகத் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற இயேசு தம்மை முழுமையாக அர்ப்பணிக்கின்றார். "இதோ, இறைவா, உம் திருவுளத்தை நிறைவேற்ற வந்துவிட்டேன்" (எபி. 10:7). பன்னிரெண்டு வயது நடக்கும்போது இயேசு திருவிழாவுக்காக யெருசலேம் செல்கின்றார், திருவிழா முடிந்தபின் தம் பெற்றோருடன் திரும்பிச் செல்லாமல், யெருசலேம் தேவாலயத்தில் தங்கிவிடுகிறார். அன்போடு, அக்கறையோடு, கண்ணீரோடு, கவலையோடு தன்னை தேடிவந்த தம் பெற்றோரைப் பார்த்து இயேசு இவ்வாறு கூறுகின்றார்: "ஏன் என்னைத் தேடினீர்கள்? என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்க வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதா?" (லூக். 2:49). இயேசு, தம் தந்தையோடு எப்போதும் இருக்க வேண்டும் என்றும், தம் தந்தையின் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்.

இயேசு, வானகத் தந்தையின் மீட்புத்திருவுளத்தை நிறைவேற்றுவதையும், மீட்புத் திட்டத்தை நிறைவுக்குக் கொண்டுவருவதையும் தம் வாழ்வின் ஒரே நோக்கமாகக் கொண்டிருந்தார் என்று நற்செய்தியின் ஏடுகளில் நாம் வாசிக்கின்றோம். "என் விருப்பத்தை நிறைவேற்ற அன்று, என்னை அனுப்பினவருடைய விருப்பத்தை நிறைவேற்றவே நான் வானத்திலிருந்து இறங்கிவந்தேன்." (அரு. 6:38) என்று இயேசு கூறுகின்றார். "என்னை அனுப்பினவரின் விருப்பத்தின்படி நடந்து, அவரது வேலையைச் செய்து முடிப்பதே என் உணவு" (அரு. 4:34) என்று இயேசு எடுத்துரைக்கின்றார். இயேசு, தந்தையால் அருள்பொழிவு செய்யப்பட்டு, இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார் என்பதற்கு (அரு. 10:36) தான் செய்து முடிக்கத் தந்தை தனக்கு அருளிய செயல்களே, தான் செய்து வரும் அச் செயல்களே சான்று பகர்கின்றன( அரு. 5:36) என்று இயேசு கூறுகின்றார். இயேசு எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும், தாம் தம் தந்தையின் மகன் என்பதையும், தாம் தந்தையிலும், தந்தை தம்மிலும் இருக்கின்றார் என்பதையும் (அரு. 10:38). ஆழ்ந்து உணர்ந்தவராய் தந்தையின் மகிமைக்காக, உலகின் மீட்புக்காக அனைத்தையும் செய்து வந்தார்.

தம் பணிவாழ்வின் தொடக்கத்தில், உலகின் பாவங்களை போக்கும் "கடவுளுடைய செம்மறியாக" (அரு. 1:36) இயேசு அறிமுகப்படுத்தப்படுகிறார். "பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் (மாற். 10:45) இயேசு இவ்வுலகில் மனிதவுரு எடுத்தார். அனைவரின் மீட்புக்கு ஈடாகத் தம்மையே அவர் சிலுவையில் கையளிக்கின்றார் (1திமோ 2:16). கல்வாரி மலையில் பாவங்களைப்போக்கும் இறைவனின் செம்மறியாக இயேசு காட்சியளிக்கின்றார்.

இயேசு, தம் பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு வழியாக உலகிற்கு மீட்பு கொணர வேண்டும்மென்பது வானகத்தந்தையின் திருவுளம். இயேசு, தம் பாடுகளைப் பற்றியும், மரணத்தைப் பற்றியும் தம் சீடர்களுக்கு மூன்றுமுறை தெளிவாக முன்னறிவிக்கின்றார். "மனுமகன் தலைமைக் குருக்களிடமும் மறைநூல் அறிஞரிடமும் கையிளிக்கப்படுவார். அவர்கள் அவருக்குத் கொலைத் தீர்ப்பிட்டு, அவரை புறவினத்தாரிடம் கையளிப்பர். அவர்கள் அவரை எள்ளிநகையாடி, துப்பி, சாட்டையால் அடித்துக் கொல்லுவார்கள். அவரோ மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழுவார்" (மாற். 10:33-34), "மனுமகனில் விசுவாசம் கொள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ்வைப் பெறும்பொருட்டு, மோயீசன் பாலைவனத்தில் பாம்பை உயர்த்தியதுபோல்,

மனுமகனும் உயர்த்தப்பட வேண்டும்" (அரு. 3:14) என்று இயேசு தம் சிலுவை மரணம் பற்றி தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

தந்தையிடமிருந்து புறப்பட்டு உலகிற்கு வந்த இயேசு, தந்தையின் மீட்புத் திருவுளத்தை நிறைவேற்ற தம்மை பாடுகளுக்கும் சிலுவை மரணத்திற்கும் கையளிக்கின்றார். இயேசு, நமக்காக, நமது பாவங்களின் மன்னிப்புக்காக, நமது மீட்புக்காக, இதோ சிலுவையிலே தொங்கிக் கொண்டிருக்கின்றார். அவரது புனிதமான இரத்தம் சிந்தப்படுகிறது. தம் உடலிலும், உள்ளத்திலும் இயேசு மிகுந்த வேதனைகளை அனுபவிக்கின்றார். இயேசு, தமது பாடுகள் சிலுவை மரணம் வழியாக நம் பாவங்களுக்குப் பரிகாரம் செய்கின்றார். நம்மை தம் தந்தையோடு ஒப்புரவாக்குகின்றார். கடவுளின் மீட்புத் திட்டம் தமது பாடுகளாலும்

கடவுளின் மீட்புத் திட்டம் தமது பாடுகளாலும் சிலுவை மரணத்தாலும் முற்றிலும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு, "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறுகின்றார். வானகத் தந்தையின் அன்பும் இரக்கமும் அளவுகடந்த விதமாக இயேசுவின் சிலுவை மரணத்தின் வழியாக வெளிப்படுத்தப்படுகின்றன. முதல் ஆதாம் செய்த பாவத்தினால் மனித குலத்திற்கு சாவு வந்தது. புதிய ஆதாமாகிய இயேசுவின் சிலுவை மரணத்தால் மனித குலத்திற்கு வாழ்வு அருளப்படுகிறது. முதல் மனிதன் கீழ்ப்படியாமையால் இழந்த அருள்வாழ்வை இயேசு தமது கீழ்ப்படிதல் நிறைந்த சிலுவை மரணத்தால் நமக்குப் பெற்றுத் தருகின்றார்.

சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் உலகின் மீட்பர் இயேசு, மீட்பின் அருளை மனம் வருந்தும் நல்ல கள்ளனுக்கு அருளுகின்றார். தம் பகைவர்களுக்கு மன்னிப்பு வழங்குகின்றார் தம் சிலுவையின் அடியில் நின்று கொண்டிருக்கும் தம் அன்புத் தாயை தம் அன்புச் சீடருக்கு தாயாகக் கொடுத்து, ஒரு புதிய திருஅவையை ஏற்படுத்துகின்றார். சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசு (அரு. 3:14), தந்தை "தனக்குச் செய்யக்கொடுத்த பணியைச் செய்து முடித்து" (அரு. 17:4) தந்தையை மகிமைப் படுத்துகின்றார். இயேசுவைப் பற்றிய இறைநூல் வாக்குகள் நிறைவைக் காண்கின்றன. இயேசுவின் பாடுகள், சிலுவை மரணம் வழியாக இறைவனின் மீட்புத்திட்டம் உச்ச நிலையை அடைகிறது; இறைவனின் மீட்புத்திருவுளம் முற்றிலும் நிறைவேறுகிறது. எனவே இயேசு, "எல்லாம் நிறைவேறிற்று" (அரு 19:30) என்று கூறி தம் ஆவியை தம் தந்தையின் கையில் (லூக் 23:46) ஒப்படைக்கின்றார். இயேசு இறந்தவுடன், நூற்றுவர் தலைவர் மீட்பின் அருளைப் பெற்று, இயேசு "கடவுளின் மகன்" (மாற் 15:39) என்று அறிக்கையிடுகின்றார். உலகில் பிறக்கும் எல்லோரும் வாழவேண்டுமென்றுதான் பிறக்கின்றார்கள்; சாகவேண்டுமென்றல்ல. சாகவேண்டும் என்றே இந்த உலகில் பிறந்த ஒரே ஒருவர் இயேசு கிறிஸ்துதான்.

இயேசுவின் சிலுவை சாவு வழியாக நாம் எல்லோரும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இயேசுவின் பாடுகளுக்கும் சிலுவை மரணத்திற்கும் யார் காரணம்? நாம்தான்; நம் பாவங்கள்தான். எனவே, கண்ணீர் நிறைந்த கண்களோடு கல்வாரிக்குச் செல்வோம். சிலுவையிலே நமக்காகத் தொங்கிக்கொண்டிருக்கும் இயேசுவை உடைந்த உள்ளத்தோடு உற்றுநோக்குவோம்; நம் பாவங்களுக்காக மனம் வருந்தி நம் மனஸ்தாபக் கண்ணீரை இயேசுவின் பாதங்களில் கொட்டுவோம். இயேசு நமக்காக தம் உயிரைக் கொடுத்ததுபோல, நாமும் நம் சகோதர சகோதரிகளுக்காக நம் உயிரைக் கொடுக்க முன்வருவோம் (1அரு. 3:16). இயேசு தம் வானகத் தந்தையின் திருவுளத்தை முழுமையாக நிறைவேற்றி, வானகத் தந்தையை மகிமைப்படுத்துகின்றார். அதுபோல் நாமும், கடவுளின் திருவுளத்தை நம் வாழ்வில் முழுமையாக நிறைவேற்றி, கடவுளை மகிமைபடுத்வோம். இயேசுவினால் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நம்மால் எத்தனைபேர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்?